# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 170/2021 நாள்.11.03.2026

DW2- திரு.அருண்பிரசாத் , த/பெ. திரு.கரிகாலன்

வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் ஆமாம். நான் அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் ஆமாம். இந்த வழக்கின் வாதி என் தகப்பனார் கேட்டுகொண்தற்கிணங்க சாட்சியம் சொன்னேன் என்றால் ஆமாம். என்னுடைய பிரமாண வாக்குமூலம் என் தகப்பனாரின் வழக்கறிஞர் அலுவலகத்தில் தயார் செய்யபட்டது என்றால் ஆமாம். என் அப்பா என்ன வாக்குமூலம் தாக்கல் செய்தாரோ அதை மறுபதிப்பு எடுத்து என் பெயர் சேர்த்து தாக்கல்செய்துள்ளேன் என்றால் இல்லை. ரவிக்குமார் நடத்திய கல்வி நிலையத்தின் பெயர் என்ன என்றால் பாரதியார் யூனிவர்சிட்டி தொலைதூர கல்வி நிலையம். ரவிக்குமார் அதற்கு இயக்குநராக இருந்தார் என்பதை காண்பிக்க ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வாதியிடம் பணம் பெற்று கொண்டுதான் அடமான பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் இல்லை. அடமான பத்திரம் பதிவு செய்யபட்ட ஆவணம் என்றால் ஆமாம். பதிவு செய்யபட்ட ஆவணத்தில் வாதி கொடுத்த தொகையும், என் அப்பா அடமானம் எழுதி கொடுத்த தகவலும் கையெழுத்தும் உள்ளது என்றால் ஆமாம். ரவிக்குமாரிடம் நான் 15 லட்சம் பணம் கொடுத்ததை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். தொலைதூர கல்வி மையத்தில் எனக்கு பணிநியமனம் கொடுத்த உத்தரவு தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். மாதம்மாதம் 24000 வாதியின் கணக்கில் பணம் செலுத்தியதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். வாதியிடம் மாருதி மருத்துவமனையில் வைத்து 1,00,000 கொடுத்ததற்கும் வாதி அனுப்பியதாக சொல்லி வந்த ரங்கராஜ்டம் 1,50,000 கொடுத்ததை காண்பிப்பதற்கும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். ரவிக்குமார் மீது புகார் கொடுத்து என்ன மேல் நடவடிக்கை எடுத்தார்கள் என்று ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் முதல் தகவல் அறிக்கை பதியபட்டது. வாதியிடம் என் தகப்பனார் பணம் வாங்கிகொண்டுதான் அடமான பத்திரம் எழுதி கொடுத்தார் என்றும் அதை அவர் கொடுக்க கடமைபட்டவர் என்றும் சொன்னால் இல்லை. வாதியிடம் வாங்கிய கடனை என் தகப்பனார் ஏமாற்றுவதற்கு பொய் கட்சி செய்கிறார் என்றும் அதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால்

சரியல்ல. வாதியின் பரிகாரம் அவருக்கு கிடைக்ககூடியது என்றும் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.11 17:26:20 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**